136

8 பக்கங்கள்

விலை 0—1—3

"UDAYAM" Weekly.




வார வெளியீடு.

ஆசிரியர் :— M. கந்தசாமி

மலர் 1 | திருவத்திபுரம் 8—9—46 விய ஆவணிமீ 23உ ஞாயிறு | இதழ் 6

# வாளைக் காட்டிலும் வல்லமை வாய்ந்தது பேனா!

## ரூஸோவின் வீர வாழ்க்கை

## மன்னனையும் மதியா மாவீரன்

பேனா, வாளைக்காட்டிலும் வல்லமை வாய்ந்தது என்று மேனாட்டு அறிஞரால் அன்றொரு நாள் கூறப்பட்டது.

கொடுங் கோலாட்சிகள் கவிழ்ந்த வரலாறுகளையும், அடிமைகளாய் சுதந்திரமிழந்து இருந்தவர்கள் சுதந்திரம் பெற்றதையும், ஆங்காங்கு பெரும் புரட்சிகள் தோன்றியிருப்பதையும் பார்த்தால் உண்மையிலே வாளைக்காட்டிலும் பேனா எவ்வளவு வல்லமையுடையது என்பது விளங்கும்.

அறிஞர்கள் எழுத்துக்கள், தன்னை என்னும் எவராலும் அசைக்க முடியாது, தாம் கடவுளால் பிறப்பிக்கப்பட்டவர்கள், சர்வ வல்லமையுடையவர்கள் என்று இருமாந்திருந்த எத்தனையோ அரசுகளை கவிழ்த்து விட்டிருக்கின்றன; பெரும் பெரும் புரட்சிகளை தோற்றுவித்திருக்கின்றன.

ஆனால், அதே சமயத்தில், மக்களை மாக்களாக்கி, மடமையில் மூழ்கச்செய்து அடிமைகளாகச் செய்து வைத்திருப்பதும் எழுத்துக்கள்தான் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

எவ்வாறு மனிதனது நன்மைக்காக பயன்படக்கூடிய வாள் மனிதனைக் கொல்ல பயன்படுகிறதோ அதுபோல பேனாவும், சிலரது கையில் அகப்பட்டுக்கொண்டு மனித சமூகத்தை அழுத்த—அடிமைப்படுத்த பயன்படுகிறது.

எனவே, எந்த ஆயுதமும் அதை உபயோகிக்கும் ஆளைப்பொருத்திருக்கிறது அதன் பயன்.

ஆனால், நாம் இங்கு விளக்க ஆசைப்படுவது, பேனா, வாளைக் காட்டிலும் எவ்வாறு வல்லமை வாய்ந்தது என்பதாகும்.

அமெரிக்காவில் நீக்ரோ அடிமைகளை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப் பெரும் புயலைக்கிளப்பியது "அங்கிள் டாம்ஸ் காபின்" (Uncle Tomins Cabin) என்னும் நாவலாகும்.

ருஷ்யாவை சார் மன்னரின் கொடுங்கோலாட்சியிலிருந்து விடுவிக்க பெரும் புரட்சியை கிளப்பியது மார்க்ஸ் எழுதிய நூல்களாகும்.

மத ஆதிக்கத்தின் கீழ், குருட்டு நம்பிக்கையில் மூழ்கிக்கிடந்த பிரான்சை தட்டியெழுப்பி புரட்சித்தீயை மூட்டியது வால்டேர், ரூஸோ என்பவர்களால் எழுதப்பட்ட நூல்களாகும்.

ரூஸோ பெரிய அரசியல் அறிவாளி.

அவரது நூல்களுக்கு அளவு கடந்த செல்வாக்கிருந்தது.

சைனா, சன்யாட்சன் என்னும் வீரரால் விடுதலை யடைந்தது போல்,

எகிப்து, ஜக்லுல்பாட் சாவால் இன்பமடைந்ததுபோல்,

அயர்லாந்து டி'வேலராவால் சுயேச்சை யடைந்ததுபோல்,

அமெரிக்கா வாஷிங்டனால் உரிமை யடைந்ததுபோல்,

பிரான்சு, நெப்போலியனால் விடுதலை யடைந்தது.

நெப்போலியனுக்கு இவ்வுணர்ச்சி தோன்றுவதற்கு, பக்கத் துணைகளா யிருந்தவைகளில் ரூஸோவின் நூல்கள் சிலவும் ஆகும்.

### ரூஸோ பிறப்பு

ரூஸோ பிறப்பதற்கு முன் ஐரோப்பா கண்டம் கத்தோலிக்க மத ஆதிக்கத்தின் கீழ் சிக்குண்டு எவ்வளவு தூரம் அழுந்திக் கிடந்தது என்பதை அக்காலைய சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் விளங்கும்.

அக்காலில் மதத் தலைவர்களிட்டது தான் சட்டமாக விளங்கி வந்தது. அரசே அவர்கள் கையில்இருந்தது என்று சொன்னால் மிகையாகாது.

அரசர்களது அடக்குமுறையும் பணக்காரர்களது ஆதிக்கமும் ஏழை மக்களை—பாமர மக்களை சொல்லொன்னாத கொடுமைக்குள்ளாக்கி வந்தது.

இத்தகைய சூழ் நிலையில் தான் ரூஸோ 1712 ஆம் ஆண்டில் பிறந்தார். இவரது தந்தை ஜினிவா நகரத்தில் காலத்தை அளக்கும் கருவிகள் தயார் செய்பவர்.

ரூஸோ இளமையில் கல்வி கற்காது, எத்தொழிலும் பழகாது நெறியற்றவர்களுடன் கூடித்திரிந்தார். இதனால், அவர் உடல் நலம் கெட்டு, மனோவேதனைப்பட்டு கவலையிலாழ்ந்திருந்தார்.

இவ்வளவு துன்பத்திற்கிடையிலும் யாரையும் இலட்சியம் செய்யாமல், தன் வாழ்க்கையை நடத்தி வந்தார்.

பின்னர், கல்விகற்று, இவர் நூல்கள் இயற்றத் தொடங்கினார். அவ

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்

# தமிழாசிரியர் நிலை

I

தமிழ் மக்கள் நிலை இன்று மிகப் பரிதாபத்திற்குரியதா யிருக்கிறது. நாயினும் கேடாய் உழல்கின்றனர். அரசியல் பொருளாதாரம், சமுதாயம், கல்வி ஆகிய துறைகளில் பின்னணியிலிருந்து வருகிறார்கள். இவர்கள் மூடப் பழக்க வழக்கங்களில் புதையுண்டு கிடக்கின்றனர். இத்தகைய நிலைமையிலுள்ள மக்களைச்சார்ந்த தமிழாசிரியர்களின் நிலை எவ்வாறு இருக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ?

தமிழ் மகன் என்காவது மதிக்கப்பட்டால் அல்லவா தமிழாசிரியர் மதிக்கப்படுவார்கள்? தமிழ் மகனே 'சூத்திரன்', அடிமை என்று கருதப்படும்போது தமிழாசிரியர்கள் மட்டும் வேறாகக் கருதப்படுவார்களா?

இருந்தாலும், மற்ற ஆசிரியர்களின் நிலையைப்பற்றி கவனிக்கப் பட்டுவரும்போது தமிழாசிரியர் நிலையைப்பற்றி மட்டும் கவனியாமலிருப்பது கண்டிக்கக்கூடிய காரியமாகும்.

மற்ற ஆசிரியர்களைப்போலவும் இன்னும் அதற்கு மேலாகவும் தமிழாசிரியர்கள் பாடுபடுகிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

நாமக்கல் தமிழாசிரியர் கழகத்தார் சென்ற திங்களில் வெளியிட்டுள்ள துண்டு பிரதியில் கண்டுள்ளபடி, ஒவ்வொரு தமிழாசிரியரும் 160 கட்டுரைப் புத்தகங்களுக்குமேலாகவே திருத்தி வருகின்றனர். இவ்வளவு கஷ்டப்பட்டும் மற்ற ஆசிரியர்களைப்போல் உழைத்தும், மற்றவர்கள் பெறும் சலுகைகள், ஊதியங்கள் பெற வழியில்லையென்றால், எத்தனை நாளைக்குத்தான் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்?

இப்போது அரசியலார் நடத்தும் (S. S. L. C.) சோதனைக்கு, அவ்வகுப்புக்குப் பாடம் கற்பிக்கத்தகுதியுள்ள மற்றைய ஆசிரியர்கள் கண்காணிப்பாளராகச் செல்லுவது போலவே தமிழாசிரியர்கள் அனுப்பப்படுவதில்லை.

ஒரே தகுதி பெற்ற தமிழாசிரியர்களிடையே மற்றெந்த ஆசிரியர்களிடையேயும் காணமுடியாத தலைமை (senior) உதவி (junior) என்று பிரித்துவைக்கப் பட்டிருக்கிறது.

கல்லூரி, உயர் நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் அரசியலார் நடத்தும் தேர்வு விடைத் தாள்களைத் (answer papers) திருத்தும் மற்றைய மொழி ஆசிரியர்கள் பெறும் அளவு தொகை தமிழ் விடைத்தாள் திருத்தும் தமிழாசிரியர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

இன்னும் இது போன்ற பல குறைகள் இருந்து வருகின்றன. இக் குறைகள் ஒழிக்கப்படவேண்டியது மிக மிக அவசரமும் அவசியமுமான காரியமாகும். இதை எவரும் மறுக்க முடியாது.

ஆனால்,

தமிழர்கள் இன்று இவ்வளவு இழிவான நிலையிலிருப்பதற்கு யார் காரணம்? எவை காரணம்? என்பதை இவர்கள் ஒரு பொழுதாவது எண்ணிப் பார்ப்பதுண்டா? எண்ணிப்பார்த்திருந்தால் புரட்சிக் கவி அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளவாறு செக்கு மாடு சுற்றிச் சுற்றி வருவதுபோல், எழுதினதையே மாற்றி மாற்றி எழுதிக் கொண்டும் புதுப் புதுப் பொருள்கள் கூறிக் கொண்டும் வருவார்களா?

இன்றுள்ள தமிழ் நூல்கள் எனப் படுபவைகளில் பெரும்பான்மையானவைகள் தமிழ் மக்களை இழிவுபடுத்தக்கூடியனவைகளும் அடிமைப் படுத்தக் கூடியவைகளுமாக வன்றோ இருக்கின்றன. இவைகளைத்தானே இவர்கள் போற்றி புகழ்கின்றனர்? இவைகளிலுள்ள கவியின் அழகை இரசத்தைப் பருகி இன்பத்தில் மூழ்கியிருக்கின்றனர்?

ஒன்றே குலம், ஒருவனே தெய்வம் என்ற உயர்ந்த பண்போடு கூடி வாழ்ந்த மக்களை பல சாதிகள் எனப் பிரித்து பல கடவுள்களைத் தோற்றுவித்தது யார்? எவை? இவைகளை ஆதரிக்கும் நூல்களையும் பழக்க வழக்கங்களையும் கண்டிக்க எத்தனை தமிழ்ப் புலவர்கள்—தமிழாசியர்கள் முன்வந்தார்கள்? தமிழ் மக்கள் தன்மானத்துடன் வாழ, மற்ற மக்களுடன் சரி சமகாக வாழ அறிவு விளக்கத்திற்கான எவ்வளவு நூல்களை இவர்கள் எழுதியுள்ளார்கள்?

இந்தி, ஓம்மாகாணத்தில் கட்டாயப் பாடமாகப் புகுத்தப் பட்ட காலையில் அதை எதிர்த்து நடந்த கிளர்ச்சியின்போது, தமிழ் மொழி அழிக்கப்படுகின்றதே, தமிழ் நாகரிகம் அழிந்து விடுமே என்று எத்தனை தமிழா சிரியர்கள் முன் வந்தார்கள்? ஏதோ பேராசிரியர் சோமசுந்தர பாரதியார் போன்ற ஒரு சில தமிழாசிரியர்கள் முன்வந்தார்களேயல்லாது வேறு எவர் வந்தார்கள்?

எத்தனை தமிழாசிரியர்கள், இந்தி மொழி வந்தால், தமிழ் கெடாது, தமிழ் மொழி அழியாது, தமிழர் நாகரிகம் மறையாது என்று இந்திக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு அன்று பேசியும் எழுதியும் வந்தார்கள்? இதை யார் இதற்குள் மறந்திருப்பார்கள்? எத்தனை தமிழாசிரியர்கள் காங்கரசில் சேர்ந்துகொண்டு கதர் அணிந்து கொண்டு இந்திப் பிரச்சாரம் செய்து வந்தார்கள் வருகிறார்கள்?

இவ்வாறு எடுத்துக் காட்டுவதால், தமிழாசிரியர்கள் நிலையுயர்வடைய நாம் விரும்ப வில்லை யென்றும் எவரும் கருதக் கூடாது. தமிழ் மக்கள் நிலையே உயர்வடைய வேண்டும்; அவர்கள் எக்கட்சி, எம்மதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், அவர்கள் நிலையுயரவேண்டும்; ஒரு சிலர், நிலையுயர்ந்து மற்றவர்கள் நிலை தாழ்ந்திருந்தால், அது என்றும் ஆபத்து; சமுதாய வாழ்வு உயர முடியாது, என்பதை நாமறிவோம்.

ஆகவே, தமிழாசிரியர்கள் நிலையைக்கண்டிப்பாக கவனித்து அவர்களது குறைகளை நீக்க பாடுபட வேண்டும் என்று மனப்பூர்வமாக ஆசைப் படுகிறோம். அதே சமயத்தில், தமிழாசிரியர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்பவர்கள், தமிழரின் இன்றைய நிலையை எண்ணிப் பார்த்து, இவர்களின் முன்னேற்றத்திற்கு எந்தெந்த வகையில் பாடுபட முடியுமென்பதையுணர்ந்து, அதற்கான முறையில் பாடுபட முன்வரவேண்டும் என்றும் ஆசைப்படுகிறோம்.

மற்றும், தமிழ் மக்கள் அறிவு விளக்கம் பெறுவதற்கு, பண்டைய தமிழ் நூல்களை மட்டும் பெயர்த்து எழுதிக் கொண்டிருப்பதிலே தம் கடன் தீர்ந்துவிட்ட தென்றெண்ணாமல், மேனாட்டு அறிவு நூல்களை தமிழில் எளிய நடையில் எழுதி வெளியிடச் செய்யவேண்டும்.

மேநாட்டு நூல்களை தமிழில் எழுதுவதென்றால், ஆங்கிலப் பதங்களுக்கு வட மொழிப் பதங்களைக் கொண்டு எழுதுவதுதான் தமிழில் எழுதுவது என்று கொள்ளாமல், தமிழ்ப் பதங்களைக் கொண்டே விளக்கவேண்டும், இல்லையேல் ஆங்கிலப் பதத்தையே தமிழ் எழுத்திலே எழுதிவிடலாம், வட மொழிக்கு இடந்தரலாகாது என்ற உறுதி தமிழாசிரியர்களிடம் பிறக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

# "அணுக்குண்டு"

(எமனார்)

ராஜாஜி மேதைக்கு சென்னை மந்திரிகள் பாராட்டு —ஒரு செய்தி

வேலிக்கு ஓணான் சாக்ஷி.

நீங்கள் பஞ்சபூத சக்திகளை சரியானபடி உபயோகித்தீர்களா இல்லையா என்பதை யார் சொல்ல முடியும்? —காந்தி

சுபாஷ்பாபு உயிரோடு இருக்கிறார் என்று "அடிக்கடி வந்து உங்களிடம பேசும் அந்தராத்மாவால்" கூடவா சொல்ல முடியாது?

மகாபாரதமானது அறிவு புகட்டுவதற்காக ஏற்பட்ட மறைமுகமான கதையே அன்றி நடந்ததைக் கூறும் சரித்திரம் அன்று. —ஷெயார்

சபாஷ் மகாத்மா! இதையே தான் எங்கள் பெரியாரும் சொல்லுகிறார். அவரை மட்டும் நாத்திகன் என்கிறார்களே! என்ன ஆச்சரியம்!

காந்திஜி ஓர் மாபெரும் புரட்சிக்காரர் தான் —அருணா ஆசப் அலி அஹிம்சையைப் போதித்துக் கொண்டு, ராம்துன் பஜனை செய்யும் ஆத்மாவா? வேடிக்கை தான்!

பிரஜா உரிமை, பிரஜா உரிமை என்று கோஷித்துக் கொண்டு சிலர் அமைதியையும், ஒழுங்கையும் சீர்குலைத்து வருவதற்கு இடம் தரலாகாது—ஒரு சிலரது உரிமைக்காக சமூக முழுதின் வாழ்வையும் சிதறும்படி விடுவது கூடாது.

'தினமணி' தலையங்கம்

1942 கலவரத்தின் போது இதையே தான் நாங்களும் சொன்னோம். ஆனால் அது காட்டுக் கூச்சலாக இருந்தது இப்பொழுது தேவாம்ருதமாக இருக்கிறது. ஏன்? எல்லாம் தாப்டி துணி போட்டுக் கொண்டதனால் தான்!

காந்திஜி, ஆஸாத் ஜாகைகளில் பந்தோபஸ்து —தினமணி

"வெள்ளையனே வெளியேறு" என்று கத்தினீர்களே! ஏன் இப்பொழுது அவனுடைய பந்தோபஸ்து? "சர்க்காரை" சுற்றிலும் பந்தோபஸ்து போடுவது தானே!

என்னுடைய யோசனை யாதெனில் காங்கிரஸ் சர்க்கார் சரியாக நடக்கிறதா நடக்கவில்லையா என்று நியாயாதிபதி போல் பரிசீலனை செய்யாமலிருக்க வேண்டும் என்பதேயாகும். —காந்தி

சொன்னதும் சொல்கிறீர்கள் 100ல் 1 தான், தங்கள் திருவாக்கு.

இம்மாதிரி குருட்டு நம்பிக்கையுடன் தான் தங்கள் பேச்சைக் கேட்டு திராவிடத் தோழர்கள் பலர் காங்கிரஸில் தங்களைப்போல் "மௌன விரதம்" பூண்டு இனத்துரோகம் செய்து கொண்டு இருக்கிறார்கள்!

பிரிட்டிஷ் மந்திரிகளும், வைஸ்ராய் வேவலும் முஸ்லிம்லீக் தலைவர்களை எவ்வளவோ தாஜா செய்து பார்த்தது தேசம் அறிந்த விஷயம். —கல்கி

அட கன்றாவியே! வேப்பிலை அடித்துப் பார்திருக்கக்கூடாதா.

காங்கிரஸ் தலைவர்கள் வாயை மூடிக்கொண்டு சும்மா இருப்பதால் பயனில்லை. அவர்கள் தேர்தலில் கலந்து கொள்ளாவிட்டால் கருப்புக் கொடியும், சிகப்புக் கொடியும் மண்ணும், மண்ணாங் கட்டியும்தான் ஸ்தல ஸ்தாபனங்களில் நிறைந்து விடும். —தமிழ் மணி

மணியான வாசகம்! ஸ்தல ஸ்தாபனங்கள் "வெள்ளை குல்லாய்க்குத்" தான் மிட்டா மிராசா? கழுதை, குதிரை போய் உட்காருவதை விட கருப்புக் கொடியும், சிகப்புக் கொடியும் எவ்வளவோ மேலாச்சே!

ஒருவேளை ஐயருக்கும் ஐயங்காருக்கும் தான் மூளை இருக்கிறது; நிர்வாகத் திறமை இருக்கிறது என்று ஆச்சாரியார் கோஷ்டியினரும் அவரை ஆதரிப்பவர்களும் எண்ணிக்கொண்டிருக்கிறவர்களா? —தமிழ் மணி

பேஷ்! பல பேஷ்!! இன்று தான் 'ஞானஸ்நானம்'' ஆயிருக்கிறது போல் இருக்கிறது!

உண்மையான நேரடி நடவடிக்கை யென்றால் இவர்கள் வெள்ளையருடன் போரிட்டிருக்க வேண்டும் —ஷெடி

முன்னே போகிற ஏர் வழியிலே தான் பின் ஏரும் போகும்! எல்லாம் "ஆகஸ்டு தியாகிகளின்" பாடம் தான்!

## யாரால் ஒதுங்கி யிருக்க முடியும்?

இந்திய முஸ்லிம்களுக்கு இன்று சோதனை ஏற்பட்டிருக்கிறது இந்நிலையில் எந்த முஸ்லிம் தான் தம் இனத்தை காட்டிக் கொடுக்கத் துணிவார்? எவர் தான் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்? எனவே தான் ஏதோ சிறிது காலம் பிரிந்து இருந்த வங்கப்புலி பஸ்லுல் ஹக் மீண்டும் லீக்கில் சேர்ந்து ஆயுள் முழுவதும் உழைத்துவரத் தயார் என்று ஒப்புக் கொண்டு கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

# அடக்குமுறை

சுதந்தரத்தைப் பெறுவதற்காக தன்மானத்தைப் பெறுவதற்காகப் போராடுகிறவர்கள் உரிமைக்காகப் போராடுகிறவர்கள் எத்தகைய கொடிய அடக்கு முறைக்கும், தண்டனைக்கும் கொலைக்கும் ஆளாகியிருக்கிறார்கள் என்பது உலக சரித்திரம் நன்கு விளக்கும். அதிலும் குறிப்பாக நம் நாட்டிலுள்ள இதிகாசங்களும் புராணங்களும் மிகத் தெளிவாக விளக்கும். ஆனால் நம் நாட்டிலுள்ள அடக்கப் பட்டுள்ள ஒடுக்கப் பட்டுள்ள மக்கள் அறியாமையில் மூழ்கியிருப்பதால், பகுத்தறியும் திறமையைப் பெறாததால் குருட்டு நம்பிக்கையிலே பழக்கப் படுத்தப் பட்டு விட்டதால், இவ்விதிகாசங்களில்-புராணங்களில் வரும் இனப் போராட்டங்களை—உரிமைப் போராட்டங்களை திருவிளையாடல்களாகவும் லீலைகளாவும் கருதி வருகிறார்கள்.

உண்மையில், அவைகள் யாவும் உரிமைப் போராட்டங்களே. யாகும் அதே முறையைத்தான் இன்று சிறிது முலாம் பூசிய மாதிரியில் நாட்டில் பல இடங்களில் கையாண்டு வருகிறார்கள். அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் உரிமைக்காக நடத்தும் கிளர்ச்சிகளை போராட்டங்களை வெவ்வேறு பெயர்களைச் சூட்டி அடக்கப் பார்க்கிறார்கள். அன்று ஒரு நந்தனரை தீயில் கொளுத்தி விட்டு 'கடவுளி'ன் ஒளியில் மறைந்துவிட்டார் என்று கதை கட்டி வைத்ததுபோல, நூற்றுக்கணக்கான நந்தர்களை மரத்தில் கட்டிவைத்து அடித்தும் மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்தியும் வருகிறார்கள்.

எனவே, தன்மானத்திற்காக உரிமைக்காகப் போராடுகிறவர்கள் எவ்வளவுக் கெவ்வளவு உறுதியுடனும் கட்டுப் பாட்டுடனும் இருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு தான் அவர்கள் தங்கள் போராட்டத்தில் வெற்றிபெறமுடியும். போராட்டத்திலிறங்குவதற்கு முன் ஒவ்வொருவரும் இதை கவனத்தில் வைக்க வேண்டும் என்றுஆசைப்படுகிறோம்.

## மீண்டும் ஒரு "சான்ஸ்"

காங்கரஸ் மந்திரிகள் பதவி ஏற்றதிலிருந்து காங்கரஸ் காரர்களுக்கு பற்பல "சான்ஸ்"கள் கிடைத்துக் ,கொண்டே வருகின்றன.

இப்பொழுது மீண்டுமொரு சான்ஸ் கிடைத்திருக்கிறது. அதாவது, கட்டுப்பாடு செய்யப் பட்டுள்ள பொருள்களை கள்ளத்தனமாக கடத்திச் செல்லுவதை கண்டு பிடிப்பதற்கு போலீசாருக்குப் பதில், "செள்க்கிதாரர்க"ளையே நியமிப்பதென்று சென்னை சர்க்கார் யோசித்து வருகிறார்களாம்.

கோழி கூவிற்று! வையம்,
கொண்டதோர் இருளைத், தங்க
மேழியால் உழுதான் அந்த
விரிகதிர்ச் செல்வன்; பின்னர்
ஆழிசூழ் உலகின் காட்சி
அரும்பிற்று! முளைய விழ்ந்து
வாழிய வைய மென்று
மலர்ந்தது காலை வானம்!

—புரட்சிக்கவி பாரதிதாசன்.


# உதயம்

மலர் 1 8—9—46 இதழ் 6


## வாழ்வு கல்லறையாக மாறிவிடுமா?

"சுதந்திரம், வாழ்வுக்கு
ஒளிதராவிடின்,
நம்பிக்கைக்கு ஆனந்தம்
நல்காவிடின்,
உண்மைக்கு ஞானம்
உதவாவிடின்,
அன்புக்கு ஆற்றல்
அளிக்காவிடின்,
நம்பிக்கை போய்
ஏக்கம் பெருகி
வாழ்வு கல்லறையாக
மாறிவிடும்."

என்று ஷெல்லி அன்று பாடினார். இன்று இவ்வுப கண்டத்தின் நிலைமையை, கட்சித் தலைவர்கள் போக்கைப் பார்க்கும்போது, எங்கு இந்நாட்டு மக்களின் வாழ்வு கல்லறையாக மாறிவிடுமோ என்று அஞ்ச வேண்டியவர்களாகயிருக்கிறோம்.

உண்மையில் சுதந்திரம் எனப்படுவது, வாழ்வுக்கு ஒளி தருவதாக யிருக்கவேண்டும். ஆனால் இன்று இந்நாட்டில் சுதந்திரம் வந்துவிட்டதாகப் பறைசாற்றப்படும் வேளையில், இருள் அல்லவா கௌவிக்கொண்டிருக்கிறது?

எனவேதான் அஞ்சுகிறோம், நம்பிக்கை போய் ஏக்கம் பெருகி வாழ்வு கல்லறையாக மாறிவிடுமோ என்று.

நாட்டிலே, சுதந்திரம் வந்துவிட்டது. சுதந்திர சர்க்கார் நிறுவப்பட்டுவிட்டது என்று கூறப்பட்டு வரும் நேரத்தில், அச்சம் அதிகரித்து வருகிறது, அமளி பெருகிக்கொண்டே வருகிறது; அடக்கு முறையும் ஆர்பாட்டமும் வளர்ந்து வருகிறது; இதைக்காணும் எவருக்குத்தான் வாழ்வு கல்லறையாக மாறிவிடுமோ என்ற அச்சமும் கவலையும் தோன்றாமல் இருக்க முடியுமா?

இதற்காகவா, இவ்வளவு தியாகங்கள்! போராட்டங்கள்! என்பதை எண்ணிப் பாருங்கள். இவ்வளவு தூரம் நாட்டிலே அச்சமும் அவநம்பிக்கையும் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன? இவைகளை ஒழிக்க வழி என்ன? என்பவற்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? இவைகளைக் குறித்துக் கவலையற்றிருந்துவிட்டால், இவ்வளவு அரும்பாடுபட்டு பெற்ற சுதந்திரமே எமனாகவன்றோ மாறிவிடும்? இதை எண்ணிப்பார்க்க வேண்டாமா பொறுப்புள்ளவர்கள்?

நாட்டிலே இத்தகைய அச்சம் குடிகொண்டிருப்பதற்குக் காரணமென்ன?

இவ்வுப கண்டத்தில் நூற்றுக்கணக்கான இராஜ்யங்கள் இருந்து வந்தன. ஏன்? இன்று 500க்கு மேற்பட்ட சுதேச மன்னர்கள் ஆளும் நாடுகள் தனித்தனியாக இருந்து வருகையில், அந்நாளில் நூற்றுக்கணக்கான நாடுகள் இருந்திருக்க முடியாதா? இந்த நாடுகள் எல்லாம் அந்தந்த நாட்டு மன்னர்களால் ஆளப்பட்டு வந்தன. ஆளும் பொறுப்பு மன்னர்கள் கையிலிருந்து வந்தது.

ஆனால்,

இன்று அவ்வாறு இல்லை. சுதேச சமஸ்தானங்களைத் தவிர பிரிட்டிஷ் இந்தியாவில், மன்னர் ஆட்சிமாறி மக்கள் ஆட்சி ஏற்பட்டு வருகிறது. மாகாணங்களில் மக்கள் ஆட்சி என்று சொல்லக்கூடிய ஆட்சி நடத்தப்பட்டு வருகிறது. மக்களே மன்னர்களாக மாறுங்காலம் இது. அதாவது தங்களைத் தாங்களே ஆண்டு கொள்வது என்பது. இத்தகைய ஆட்சிக்கு இங்கிலாந்து அமெரிக்கா முதலிய நாடுகளில் ஜனநாயக ஆட்சி என்று சொல்லப்படுகிறது.

ஜன நாயக ஆட்சியில் மக்கள் யாவருக்கும், அதாவது, வயது வந்த யாவருக்கும் ஆட்சியில் பொறுப்பு-வாக்குரிமை இருக்கவேண்டும். அவ்வாறு வாக்குரிமை பெற்ற மக்களால் தெரிந்தெடுக்கப் பட்டவர்களால் தான் நாடு ஆளப்படும். நாட்டை ஆளும் சட்டங்களியற்றுவதும் அதை நிர்வாகம் நடத்துவதும் அவர்களது பொறுப்பு. அந்நாடுகளில் அரசியலில் பல கட்சிகள் உண்டு, அவை, ஒவ்வொரு அரசியல் கொள்கைகளைக் கொண்டதாக இருக்கும். எக்கட்சியைச் சேர்ந்தவர்கள் பெருவாரியாக தெரிந்தெடுக்கப் படுகிறார்களோ அவர்கள் தங்கள் கட்சிக் கொள்கையைப் புகுத்துவார்கள் அரசாங்கத்தில். இதைத்தான் ஜனநாயகக் கட்சி நடப்பதாகச் சொல்லப்படும் நாடுகளில் காணமுடியும், கண்டும் வருகிறோம்.

இதே தத்துவத்தின் மீது தான் இவ்வுபகண்டம் முழுமைக்கும் ஒரு ஜனநாயக ஆட்சியை நிறுவ வேண்டும் என்று முயற்சி செய்யப்பட்டது; அந்தப்படியே ஜனநாயக ஆட்சி—சுதந்திர சர்க்கார் நிறுவப்பட்டுவிட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இவ்வுப கண்டத்தில், அரசியல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு விளங்கக்கூடிய கட்சிகளைக் காணமுடியாது. காங்கிரஸ் தன்னை இனமோ மதமோ சம்பந்த மற்றக் கட்சியென்று எவ்வளவு தான் சொல்லிக்கொண்டாலும், காங்கிரஸ் ஹிந்துக்களின் பிரதிநிதி ஸ்தாபனம் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

முஸ்லிம் லீக் 10 கோடி முஸ்லிம்களின் ஏகப் பிரதிநிதித்துவ ஸ்தாபனம் என்பதையும் எவராலும் மறுக்க முடியாது. சென்ற தேர்தலில் லீக்கைச் சேர்ந்த அபேட்சகர்கள் 100க்கு 99 வீதம் வெற்றிப் பெற்றிருப்பதை யாவரும் அறிவர். இதிலிருந்து முஸ்லிம்களின் தனி ஸ்தாபனம் முஸ்லிம் லீக் என்பதை ஒப்புக்கொண்டே யாகவேண்டும்.

அதுபோலவே, ஷெடியூல்டு வகுப்புக் கட்சியும் இன்றுள்ள கூட்டுத் தொகுதி முறையினால், வேண்டுமானால் ஷெடியூல்டு வகுப்பு மக்களின் தனி ஸ்தாபனமில்லை யென்று

சொல்லாமே யல்லாது, முஸ்லிம்களுக்கு இருப்பதுபோல், இவர்களுக்கும் தனித்தொகுதி முறையிருக்குமேயானல், ஷெடியூல்டு வகுப்புக் கட்சியும் ஒப்பற்ற தனிஸ்தாபனமாகவே விளங்கும். இதற்கு சென்ற தேர்தலில், ஆரம்பத் தேர்தலில், ஷெடியூல்டு வகுப்புப் பிரதிநிதிகள் வெற்றிப்பெற்றிருப்பதே போதிய சான்ருக விளங்கும்.

திராவிடர் கழக நிலேயும் இதுவே தான். திராவிடர்களுக்கு மட்டும் தனித்தொகுதி முறையிருந்திருக்குமேயானல், திராவிடர் கழகம், திராவிடர்களின் தனிஸ்தாபனமா அல்லவா என்பதை மெய்ப்பித்துக் காட்டிருக்க முடியும்.

இக் கட்சிகள் எல்லாம் இனத்தின் பேரால்—மதத்தின் பேரால் தோன்றி தங்கள் தங்கள் உரிமைக்காக சுதந்திரத்திற்காக போராடி வருகின்றன.

இத்தகைய கட்சிகள் உள்ள நிலேயில் காங்கிரஸ் கட்சிதான் மெஜாரிட்டியாகவுள்ள கட்சி, காரணம், இவ்வுப கண்டத்தில், ஹிந்துக்கள்தான் மெஜாரிட்டி சமூகம். மெஜாரிட்டி சமூகத்தினரால் தெரிந்தெடுக்கப் படுகிறவர்கள், ஜனநாயகம் என்று சொல்லக்கூடிய முறையில் மெஜாரிட்டிக் கட்சியினராக விளங்க முடியும். இவர்கள் கையில் ஆட்சி சக்கரம் விழும். இதை மைனரிட்டிக் கட்சிகள் என்று சொல்லப்படும் தனித்தனி சமூகக் கட்சிகள் பொறுத்துக் கொண்டிருக்க முடியுமா? அந்தந்தச் சமூகங்கள் தனிமொழி, கலே, நாகரிகம், முதலியவைகளேக் கொண்டு விளங்குகையில், இச் சமூகங்கள் ஒன்றையொன்று அடிமைப் படுத்தவும் அழிக்கவும் எண்ணி வந்திருக்கையில், ஒரு சமூகத்தை மற்ருெரு சமூகம் இழிவுபடுத்தி, தாழ்த்து, அழித்து ஒழிக்க முயன்று வந்திருக்கையில், ஒரு சமூகக் கட்சி மற்ருெரு சமூகக் கட்சியை ஜனநாயக முறைப்படி ஆள அனுமதித்துக் கொண்டிருக்க முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இத்தகைய அச்சமும், அவநம்பிக்கையும், ஜனநாயக ஆட்சி இன்று நடைபெற்றுவருவதாகச் சொல்லப்படும் பிரிட்டனிலும், அமெரிக்காவிலும், பிரான்சிலும் தர நாடுகளிலும் அந்நாளில் ஜனநாயக ஆட்சி முறை துவங்கிய காலத்தில் இருந்து வந்திருக்கிறது. இதற்குச் சரித்திரம் சான்றளிக்கும். இந்த அச்சம், ஜனநாயக ஆட்சி முறை வெற்றிகரமாக நடைபெற ஆரம்பித்தப் பிறகு சகிப்புத்தன்மையும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் வளரவளர, குறைய ஆரம்பித்தது. அதுபோல, இவ்வுப கண்டத்தில் உள்ள அச்சம் குறைய வேண்டுமானல், அத்தகைய நிலேமை ஏற்பட வேண்டும்.

இப்பொழுது எந்தெந்த பகுதிகளில், எவர்கள் மெஜாரிட்டியாகவுள்ளார்களோ, அவர்கள் தங்கள், தங்கள் ஆட்சியை நடத்திக் கொள்கிருேமென்று கேட்கிருர்கள். உண்மையிலே, இவ்வுபகண்டத்தில், ஜனநாயக ஆட்சி நிலேபெறவேண்டுமானல், அவரவர்கள் அதாவது எந்தெந்த பகுதிகளில் எவரெவர்கள் மெஜாட்டியாக வுள்ளார்களோ, அவர்களே தங்கள் தங்கள் ஆட்சியை நடத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தி, பின்னர் இவர்களுக்குள் சகிப்பும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் வளர்ந்த பிறகு, ஒரே ஜனநாயக ஆட்சி ஏற்படுத்த வேண்டும்; அப்பொழுதுதான் அது நிலே பெறமுடியும். அது இல்லேயானல் நாட்டில் கலவரமும், உள்நாட்டுக் குழப்பமும், கொலேயும், கொள்ளேயும்தான் நிகழ முடியும். நிம்மதியான வாழ்வே காணமுடியாது.

மற்றும், இந்தச் சமயத்தில்

"அரசாங்கத்திலுள்ள சகலருக்கும் சமமாக சுதந்திரமும் நீதியும் வழங்காத வரை, ஜனநாயகத்துவத்தைப் பற்றிப் பேசுவது படிப்பில்லாத மக்களே ஏய்க்க கையாளப்படும் மாயம் என்றே சொல்ல வேண்டும். மெஜாரிட்டி ஆட்சி என்பது ஒருநாளும் பொது ஜன சர்க்காராகாது. மெஜாரிட்டியார் ஆட்சி ஜனநாயக ஆட்சியென்று சொல்லிவிட முடியாது".

என காலஞ்சென்ற **சர் ஏ. வி. பாத்ரோ** சென்னேயில் 1940ல் நடந்த தெ. இ. செம்படவர் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருப்பதையும் சிந்தித்துப் பார்க்குமாறு வேண்டிக் கொள்கிருேம்.

இன்று நாட்டை எதிர் நோக்கியுள்ள அபாயத்தை எண்ணிப் பார்த்து ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும். கட்சிகளுக்கோ, தலேவர்களுக்கோ தான் இதில் பொறுப்புஇருக்கிறது என்று எவரும் கவலேயற்றத் தனமாயிருக்காமல் ஒவ்வொருவரும் தனது பொறுப்பையுணர்ந்து இந்த நெருக்கடியான சமயத்தில், இப்பேராபத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றி இந்நாட்டு மக்களின் வாழ்வு கல்லறையாக மாறிவிடாமல் தடுத்து நிற்க வேண்டும் என்று ஆசைப்படுகிருேம் இது சமயத்தில், நாட்டில் உலவி வரும் பத்திரிகைகளும் தலேவர்களும் பொறுப்புடனும் எச்சரிக்கையுடனும் நடந்துகொள்ள வேண்டும். நடந்து கொள்ளும்படிச் செய்ய வேண்டிய பொறுப்பு பொதுமக்கள் கையிலிருக்கிறது என்பதையும் இப்பொழுது இதைவிட முக்கிய பிரச்சினே நம்முன் இல்லே யென்பதையும் ஒவ்வொருவரும் கருத்தில் வைக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிருேம்.

## தனி நாடுகள் ?

கன்னடம் பேசும் பிரதேசங்கள் முழுவதற்கும் பிரிட்டிஷ கர்னடக அல்லது சமஸ்தான கர்னடக என்ற வித்தியாச மில்லாமல் ஒரு பொது நிர்வாகம் அமைப்பதன் மூலமாகத் தான் கர்னடகத்திற்கு எல்லாத் துறைகளிலும் அபிவிருத்தி செய்ய முடியும், என்று தேவனகரில் 1-9-46ல் பம்பாய் சர்க்கார் விவசாய மந்திரி தோழர் எம். பி. படீல் தலேமையில் கூடிய அகில கர்னடக மாநாட்டில் நிர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இந்தத் நிர்மானத்தின் நோக்கத்தை விளக்கி ஆதரவு தேடுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கும் ஒரு குழுவமைக்க தோழர்கள் M. P. படீல், S. நிஜாலிங்கப்பா, ஜின்ராஜ் ஹெகடே ஆகியவர்களுக்கு அதிகார மளிக்கப் பட்டிருக்கிறது.

★ ★ ★

கேரள யூனியன் சம்பந்தமாக கொச்சி மகாராஜா செய்த பிரகடனத்தை வரவேற்றும் மேற்படி யூனியனே எதிர்க்கும் சர். சி.பி. யின் வாதத்திற்கு எதிராக பொது மக்களின் ஆதரவை திரட்டுமாறு திருவிதாங்கூர் மக்களேக் கேட்டுக் கொள்வதாகவும், கொச்சி, திருவிதாங்கூர் கட்சிகளேக் கலந்து ஆலோசித்து மேற்படி திட்டத்தை விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க ஒரு சப்கமிட்டி நியமிப்பதென்றும் 1—9—46ல் கள்ளிக்கோட்டையில் தோழர் கேளப்பன் தலேமையில் நடைபெற்ற கேரள மாகாண காங்கரஸ் கமிட்டியில் நிர்மானிக்கப் பட்டது.

★ ★ ★

அரசியல் நிர்ணய சபையில், மொழிவாரியாக மாகாணங்களேப் பிரிப்பதின் அவசியத்தை, அதிலும் ஆந்திரப் பிரிவினேயை வற்புறுத்துவது பற்றி யோசிக்கவும், வருகிற 9-9-46ல் சென்னேயில் ஆந்திர மகா சபைக் கூட்டம் கூடுகிறது.

மொழி வாரியாக மாகாணங்கள் பிரிப்பது குறித்து விவாதிக்க ஆரம்ப மாநாடு ஒன்று குண்டூரில் நடைபெற இருக்கிறது. ஷெ மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அரசியல் நிர்ணய சபைக்கு தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் ஆந்திர மெம்பர்களுக்கு விசேஷ அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

# புரட்சிக் கனல்

(ஈரோடு ஜீவன்)

1. புரட்சிக் கனல் வீசிப் பறக்குதடா!—தோழா
பொய்யர்த முள்ள மெல்லாம் வேகுதடா!—இங்கு
வரட்டுக் கொள்கைக ளத்தனையும்—கனலில்
வெந்துபிடி சாம்பல் ஆகுதடா —வீண்
பிறப்பினி லுயர்வு தாழ்வதுவும்—வீணர்
பற்பல பேதங்கள் வகுத்ததுவும் – சூட்சித்
திறத்தில் தோன்றிய தீமைகளும்—புரட்சித்
தியினில் வெந்து நீறுதடா?

2. மனிதனை மனிதன் தீண்டுவதால்— இங்கு
மண்டிடும் தீமைக ளென்றுரைத்தார்—மற்றும்
தனியொரு மனிதனுக் குணவிலா—கெட்ட
தரித்திரம் தலைவிதி யென்றுரைத்தார்—எழில்
வனிதைய ரடிமைகளின் னாட்டில்—என
வகுத்திட்ட தீய திட்டமெல்லாம்—இன்றி
கனிந்தெழு புரட்சிக் கனல் தனிலே—கருகும்
கண் கொள்ளாக் காட்சியை கண்டிடடா!

3. நாட்டுக்கு நற்காலம் வந்ததடா—இனி
நமக்குள் பேதங்களில்லையடா—நம்மை
வாட்டும் வறுமை தொலைந்ததடா—இங்கு
வனிதையர் குடும்பத் தலைவியடா!—கெட்ட
திட்டும் அடிமையும் தீர்ந்ததடா—நாட்டில்
தியவர் எவரும் இல்லையடா—நம்மை
வாட்டிய கொடுமை களத்தனையும்—கனல்
விசிடும் புரட்சியில் வீழ்ந்ததடா!

4. பைந்தமிழ் நாட்டின் பெரியரேடா—பெரும்
பேதம் ஒழித்த வீரனடா—நல்ல
தாடி வளர்த்தி இன்னாட்டில்—நம்பால்
கோடி பெருமைகள் கொண்டானடா—தனித்
தூயதிராவிடம் வேண்டு மென்று—அவன்
வீரச்சமர் இங்கு செய்துவாரான்—அது
வந்து முளைத்திட்டால் இந்நாட்டில்—மேலே
வாழ்ந்த தமிழ்நாடு காண்போமடா!

சலகண்டாபுரம் பகுத்தறிவு நடிகர் கழகத்தாரால்
தலைவர் **பெரியார்**
தளபதி **அண்ணாத்துரை**
கவியரசர் **பாரதிதாசன்**
ஆகியோர் முன்னிலையில் நடத்தப்பட்டு, மூவரின்
பாராட்டையும் பெற்ற முதன்மையான நாடகம்;
பழங்கால இனப்போரைக் குறித்த பகுத்தறிவுச் சித்திரம்
சுவையுள்ள பேச்சும் பாட்டும் நிறைந்த கருத்தோவியம்.

**வீரவாலி**

(ஆக்கியோன்: ப. கண்ணன்)

அழகிய புத்தகமாக அச்சாகிக்கொண்டிருக்கிறது.
விரைவில் கிடைக்கும்.

விவரங்கள் :—**குயில் நிலையம்,**
**581, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.**

## கூட்டங்கள்

**பண்ருட்டி:** இவ்வூர் தனபால் செட்டித் தெரு சிறுவர் கழக சார்பில் தோழர் L. K. தான் தலைமையில் 25—8—46ல் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ச. கே. ராமு, T. தண்டபாணி, L. R. நாதன் முதலியவர்கள் சிறுவர் கழகமும் வருங்காலமும் என்பது பற்றி பேசினார்கள்.

13—8—46ல் தென்னாற்காடு ஜில்லா முஸ்லிம்லீக் தலைவர் தோழர் அப்துல் சயீத் சாஹிப் தலைமையில் பண்ருட்டி முஸ்லிம் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அப்துபயி ஜாக்ஷா காதிர், அப்துல் ரஜாக் சாயபு முதலியவர்கள் பேசிய பின் தோழர். M. A. காலீக் அவர்களால் நன்றி கூறப்பட்டது.

**பொள்ளாச்சி:** முஸ்லிம்லீக்கின் நேரடி போராட்ட தினம் 16—8—46ல் இங்கு விமரிசையாக கொண்டாடப் பட்டது. ஊர்வலத்திற்குப் பின் தேர் முட்டி மைதானத்தில், தோழர் A. N. ராஜா சாஹிப் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் கோவை சையத் பாவா சாயபு, பொள்ளாச்சி டீப்புசரீப் சாஹிப், சலிம் சாயபு, P. T. தாவூத்கான் முதலியவர்கள் பேசினார்கள். தோழர் P. T. தாவூத்கானால் நன்றி கூறப்பட்டது

**சேயாறு:** இவ்வூர் உயர் நிலைப்பள்ளிப் பழைய மாணவர் கழகம் ஒன்று 1-9-46ல் ஹை பள்ளி தலைமை யாசிரியர் தோழர் M. N. வடிவேல் முதலியார் தலைமையில் திறவப் பட்டது. கழக நோக்கம் பற்றி தோழர்கள் கா. கோவிந்தன், கோ. பாலசுந்தர நாயக்கர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

ஹை கழகத்திற்கு நிர்வாகஸ்தர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். தலைவர்:தோழர் M. இராஜு முதலியார்; செயலாளர்: தோழர் T. M. கோவிந்தசாமி.

கழக உறுப்பினர்கள் திங்கள் ஒன்றுக்கு 8 அணா கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் ஹை பள்ளியின் வெள்ளி விழா நடத்துவது பற்றியும் முடிவு செய்வதென்றும் தீர்மானிக்கப் பட்டது.

**வந்தவாசி:** இடைக்கால சர்க்காரைக் கண்டிக்கும் அறிகுறியாக இவ்வூரில் 2—9—46ல் மௌனதினம் கொண்டாடப் பட்டது. முஸ்லிம்களின் இல்லங்களிலும் கடைகளிலும் கருப்புக் கொடிகள் ஏற்றுவிக்கப் பட்டன. மாலையில் தோழர் P. M இஸ்மாயில் சாகிப் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில், தோழர்கள் சையத் காதர், S. M. A. குத்தூஸ் K. M A. வஹாப், ஷேக் அலி ஆகியோர் பேசினார்கள்.

## போர்வாள்

மாயாவரம் சங்கீத சபாவில் D. M. M. நாடக சபையினரால். 31-8-46 சனிக்கிழமை முதல் M.R. ராதா, M. R. மங்களம் நடிக்கும் போர்வாள் நாடகம் தினசரி இரவு 10-30 மணிக்கு நடைபெறும்.

# சினிமாவும் நாமும்

சினிமாவும் நாமும் என்ற தலைப்பில், இதற்கு முந்திய இதழ்களில் நமது கருத்து என்னவென்பதை விளக்கியிருந்தோம்.

சினிமாக்கள் அறிவு வளர்சிக்கு வாழ்வு வளம் பெறுவதற்கு மற்ற நாடுகளில் பயன் பெறுகின்றனவென்றும், இந்நாட்டிலோ அதுவும் தமிழ் நாட்டிலோ மடமையை வளர்க்க, நம்மை இழிவுபடுத்த பயன்படுகின்றனவென்றும், இவைகளை எடுத்துக்காட்டி இத்தகையபடக் காட்சிகளை மக்கள் வெறுக்க வேண்டும் ஆதரிக்கக்கூடாது என்பதை வலியுறுத்தவே சினிமாக்களைப்பற்றி நாம் எழுத முன் வந்துள்ளோம் என்று விளக்கியிருந்தோம்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கூறுவதுபோல்;

"நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார் நலிவதை" நாம் காண்கிறோம்.

இதற்குக் காரணமென்ன? "தலைவிதி" "எல்லாம் அவன் செயல்" 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்று சோம்பேறி வேதாந்தம் பேசித் திரிவதும், சாதி மத பேதங்கள், மூட வழக்கங்கள், இதனால் ஏற்பட்டுவரும் சண்டைகளும் காரணங்களல்லவா?

இன்று தமிழ் நாட்டிலுள்ள கதைகள், புராணங்கள் [illegible]வும் இதை வளர்க்கக்கூடியவைகளாகவே இருக்கின்றன. மக்கள் வாழ்வை முன்னேற்ற வந்த சினிமாவும், இவைகளையே வளர்க்கும் சாதனமாக மாறிவிட்டால், என்று தான் சுகப்படுவது என்று கேட்கிறோம்.

இன்று தமிழ் நாட்டில் காட்டப்பட்டுவரும் சினிமாப் படங்களில் 100க்கு 90க்குமேல் புராணக் கதைகளாகவே இருப்பதைக் காணலாம். இதே சமயத்தில் தெலுங்குப் படங்களையோ கன்னடப் படங்களையோ ஹிந்திப் படங்களையோ எடுத்துக் கொண்டால் பெரும்பாலும் 100க்கு 90 சமூகப் படங்களாக இருப்பதைக் காணலாம்.

ஏற்கனவே, ஆரியர்கள் செய்த சூழ்ச்சியினால், ஆரிய வலையில் சிக்குண்டு, தமிழ் நாட்டிலுள்ள நூல்கள் பெரும்பாலும் ஆரியத்தை வளர்க்கக் கூடியதாகவும், மூடபழக்க வழக்கங்களை மக்கள் மனத்தில் பதியவைக்கக் கூடியவைகளாயுமிருக்கின்றன. அதோடு சினிமாப் படங்களும் இவைகளையே விளக்கக் கூடியவைகளாக வந்துவிட்டால், தமிழனுக்கு தன்மானம் உண்டாவதுதான் எக்காலம்?

ஆகவே தான், சினிமாப் படங்களைக் கண்டிக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

மக்கள் அறிவு வளர்ச்சிக்கான கதைகளையும், ஆராய்ச்சிகளையும், விஞ்ஞான ஆராய்ச்சிகளையும் மக்களுக்கு எடுத்துக்காட்டி அறிவு பெறச்செய்யவேண்டிய நோக்கத்தில், சமுதாய புரட்சி ஏற்படுத்தி புத்துலகம் சமைக்க வேண்டிய நோக்கத்தில், இவ்வாறு புராணப் படங்களையும் ஆபாசம் நிறைந்த படங்களையும் லட்சக் கணக்கில் பணம் செலவு செய்து படம் பிடிப்பதும் அதைக் காட்டிவருவதும் என்றால், எத்தனை நாளைக்கு சகித்துக்கொண்டிருப்பது? சமயம்வரும் ஒவ்வொரு படத்திலுள்ள ஆபாசக் கருத்துக்களை விளக்கவும், மூடபக்தியை எவ்வாறு வளர்க்கின்றன என்பதை விளக்கவும்.

படம் பிடிப்பவர்கள், தங்கள் சுய நலத்தில்தான் தங்கள் பெட்டி நிறைய வேண்டும் என்பதில்தான் கவலை கொண்டவர்களாயிருக்கிறார்களேயல்லாது, மக்கள் முன்னேற்றத்தில், நாட்டின் நல்வாழ்வில் ஒரு சிறிதும் கவலையுள்ளவர்களாகயிருப்பதாக எண்ணுவதற்கில்லை.

மக்களின் வாழ்க்கை முன்னேற்றச் சாதனங்களில் ஒன்றாக விளங்கும் சினிமா படங்கள் எடுக்கும் தொழிலும் சர்க்கார் கையில் தானிருக்க வேண்டும். அப்பொழுதுதான் தனிப்பட்டவர்களின் நலனுக்குப் பயன் படுவதிலிருந்து அதைத்தடுக்க முடியும்.

## பொது நல சங்கம்

வாலாஜாபாத் தாழ்த்தப்பட்ட தமிழர்களின் பொதுநல சங்கம் 25—8—46 தேதி செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் தோழர் T. சண்முகம் அவர்கள் தலைமையில் தமிழர் தளபதி தோழர் C N அண்ணாத்துரையவர்களால் துவக்கிவைக்கப்பட்டது.

இச் சங்கம் தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்காக எல்லாத் துறைகளிலும் பாடுபடும் என்று நம்புகின்றோம்.

## திருமணம்

காஞ்சிபுரம் தோழர் தாமோதர முதலியார் திருமகன் தோழர் ராசாராமனுக்கும் திருவோத்தூர் தோழர் சி. வே. சுப்பராய முதலியார் திருமகள் அன்னபூரணி அம்மையாருக்கும் 30—8—46ல் காஞ்சிபுரத்தில் தோழர் A. K. தங்கவேலர் தலைமையில் திருமணம் நடந்தது. திருமணத்தைப் பாராட்டி தோழர்கள் M. கந்தசாமி, C. N. அண்ணாத்துரை, C. V. அண்ணாமலை, K. பாலசுப்ரமண்யம் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். மணமக்களுக்கு வாழ்த்துக்கள் வாசித்தளிக்கப்பட்டன.

# "உதயம் தோன்றி விட்டது"

சென்ற வாரத் தொடர்ச்சி

1930 சைமன் கமிஷன் அறிக்கை.
1931 காந்தி இர்வின் ஒப்பந்தம்.
1935 ஆகஸ்டு 5 இந்திய அரசியல் சட்டம்.
1939 செப்டம்பர் யுத்தகாலத்தை முன்னிட்டு சமஷ்டி நிறுத்திவைக்கப்பட்டதாக வைசிராய் அறிவிப்பு.
1940 ஜனவரி 10 லின்லித்கோ பிரசங்கம்; இந்தியாவின் எதிர்காலம் குடியேற்ற நாட்டந்தஸ்து.
1941 செப்டம்பர் 9 அட்லாண்டிக் சாசனம் (இந்தியாவுக்கு சம்பந்தம் இல்லை.)
1942 மார்ச்சு 11 கிரிப்ஸ் தூது.
1945 ஜூன் 14, வைசிராய் நிர்வாக சபையை இந்திய மயமாக்குதல்.
1946 பிப்ரவரி 22, தூது நோக்கம்.
1946 மார்ச்சு 15 இந்தியக் கொள்கைப் பற்றி அட்லி சொற்பொழிவு.
1946 ஜூன், இடைக்கால சர்க்கார் முடிவு.
1946 ஜூலை அரசியல் நிர்ணய சபை.

இந்தப் பிரகடனப் பட்டியலைப் பாருங்கள். இந்த பித்தலாட்டங்களைப் பார்த்துச் சலித்துவிட்டோம்; அலுத்து விட்டோம். ஆனால் ஒவ்வொரு சமயமும் நாம் பாடக்கேட்டிருக்கிறோம், "சுதந்திர சூரியன் உதிக்கும் நேரம், தூங்காதே தமிழா!" என்று. பொறுத்திருந்துப் பார்ப்போம்.

இதுபோல நமக்கும் பிராமணியத்திற்கும் உடன் படிக்கைகள் ஏற்படாவிட்டாலும். பல பக்கங்களிலிருந்தும் இடுக்கித் தாக்குதல் நடத்தித்தான் வந்திருக்கிறோம். புத்தர் ஒருகாலத்தில் எதிர்த்தார் அவர் காலநிலைக்கு ஏற்ற முறையில். ஆனால் இன்று பெரியார் உருவில் பிராமணிய எதிர்ப்பு சக்தி உலவி வருகிறது. அரசியல், பித்தலாட்டம் நிறைந்தது; சமுதாய இயல் உண்மையின் அடிப்படையில் ஏற்பட்டது.

வெற்றி நமக்குத்தான்!

## மறைவு

சலகண்டபுரம் நமது தோழர். ப. கண்ணன் (என்கிற ஜே. பி. கிருஷ்ணன்) அவர்களுடையவும் நமது ஏஜண்டு தோழர் அ. ப. அர்த்தனாரி அவர்களுடையவும் அன்னை திருமதி சிவகாமி அம்மையார் அவர்கள் 70வது வயதில் சென்ற 25—8—46ந் தேதி இயற்கையெய்தார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். அன்னார்களுக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். 4—9—46ந் தேதி நீத்தார் நினைவு நாள் நிறைவேறிற்று.

# இன்னுமா இப் பித்தலாட்டம்?

"பருவ மழை இந்த வருஷத்தில் பெய்யாமல் இருந்து விட்டபடியால் திண்டுக்கல் டவுனில் உள்ள கிணறுகள் மட்டுமல்லாமல் பக்கத்திலுள்ள கிணறுகளிலும் தண்ணீர் வற்ற ஆரம்பத்தி விட்டபடியால், சுமார் 50,000 ஜனத்தொகையுள்ள ஊர் மக்கள் குடிதண்ணீரில்லாமல் சாக நேரிடுமோ என்ற பயம் மக்கள் மனத்தை வாட்டிக் கொண்டிருக்கிறது."

என்பதாக ஒரு தினசரி தாளில் செய்தி காணப்படுகிறது.

ஐயோ பாவம்! அவ்வூர்வாசிகளுக்குத் தெரியாதோ அல்லது அவ்வூரில் பிராமணோத்தமர்கள் இல்லையோ என்னமோ? வருண பகவானை நோக்கி ஜபம் செய்தால் மழை பொழிந்து விடும் என்று.

தெரியாமலிருந்தால், திருச்சி ஜில்லா துறையூருக்குத் தபால் எழுதி போட்டால் வந்து விடுவார்களே பிராமணோத்தமர்கள் வருண பூஜை செய்ய. மழைக்காக ஏன் ஏங்கி நிற்க வேண்டும்? ஒரு 'டெஸ்ட்' பார்ப்பது தானே திண்டுக்கல் வாசிகள்?

ஆனால் திண்டுக்கல் வாசிகள் அவ்வளவு அறியாமையில் மூழ்கியிருக்கவில்லை யென்றே தெரிகிறது, இப்பொழுது அவர்கள் கவலைப் படிவதிலிருந்து.

மூன்றாவது வகுப்பில் படிக்கிற சிறுவனுக்கும் தெரியும் மழை எப்படி பெய்கிறது என்று.

சூரிய வெப்பத்தினால், நீர் நிலைகளிலுள்ள நீர் ஆவியாக மேலே கிளம்பி குளிர்ந்த காற்றுப்பட்டவுடன் மழையைப் பொழிவிக்கிறது என்று சாதாரணமாக பதில்சொல்லி விடுவான். இதை விளக்க, மாணவர்களுக்குப் பள்ளிகளில் உதாரணமும் (எக்ஸ் பெரிமெண்ட்டும்) செய்து காட்டப் படுகிறது.

இவ்வளவும் அறிந்த பிறகு, ஜபம் பண்ணினால்—பூஜை பண்ணினால் மழை பெய்யும் என்று கூறப்படுமானால், இன்னும் மக்களை மடையர்கள் என்று கருதிக் கொண்டு இது போன்ற காரியங்கள் இன்னும் செய்யப் படுகின்றனவா அல்லவா? இத்தகைய காரியத்தைப் பகுத்தறிவுலகம் எவ்வளவு காலத்திற்குத்தான் அனுமதித்துக் கொண்டிருப்பது. ஜபத்தினாலும் பூஜையினாலும் மழை பெய்யும் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்படுமானால், இன்று படித்தப் படிப்பும் பெற்ற அறிவும் எதற்குப் பயன் படும்?

இன்று உலகமே விஞ்ஞான அறிவு பெற்று, ஒவ்வொன்றுக்கும் காரண காரியங்களை ஆராய்ந்து கொண்டு முன்னேறிச் செல்லுகையில் நம்நாட்டில் மட்டும் அறிவுக்குப் பொருந்தாத பகுத்தறிவுக் கொவ்வாத மூடப்பழக்கத்தையும் குருட்டு நம்பிக்கையையும் நிலைக்கச் செய்யும் காரியத்தை நடத்திக் கொண்டு போவதும், இதை அனுமதித்துக் கொண்டிருப்பதா? இதற்கு சுதந்திரம் வேண்டும், பாதுகாப்பு வேண்டும் என்று கேள்ப்பதா? இன்னும் எத்தனை நாளைக்குத் தான் இத்தகைய பித்தலாட்டங்கள் நடக்கும் என்பதைத் தான் பார்ப்போமே?

---

1-ம் பக்கம் தொடர்ச்சி

ரது தீவிர எண்ணங்களைக் கண்டு அரசர்களும், முதலாளிகளும், மதத் தலைவர்களும் கலக்க முற்றனர். பொது மக்களோ வாழ்த்தி வரவேற்றனர்; ஆதரித்தனர்.

அவரது நூல்களில், அரசருக்கும் மக்களுக்கும் வேற்றுமையில்லையென்றும், அரசர்கள் தனிப் பிறவிகளல்லவென்றும், மனிதர் யாவரும் சரி நிகர் சமானமானவர் என்றும், எல்லோரும் சுதந்திரத்துடன் வாழும் உரிமைப் பெற்றவர்களென்றும் தெள்ளத்தெளிய அவர் விளக்கியிருந்தார். மதக் குருக்களின் அக்கிரமங்களை வன்மையாகக் கண்டித்திருந்தார்.

நியூஹேலாயிலா என்னும் நாவல் தான் அவரது நூல்ககளில் தலைசிறந்தது. பிரான்சு நாட்டிலு மட்டுமல்ல ஜெர்மனியிலும் இவரது புகழ் பரவலாயிற்று.

பெண்கள் அவருடைய கைப்பட்ட காகிதத்தை முத்தமிடவும், அவர் நீர் அருந்திய பாத்திரத்தில் நீர் அருந்தவும் ஆசைப்பட்டனர்.

அவருடைய எழுத்துக்கள் மக்களுடைய மனத்தில் எழுச்சியையும் உடலிலே உறுதியையும் நரம்பிலே முறுக்கையும் ஊட்டின.

1762ல் அவர் சோஷியல் காண்ட்ராக்ட் (Social Contract) என்னும் நூல் எழுதினார்.

இதில் எழுதினார், மக்கள் சித்தம் தான் சட்டமென்றும், அரசாங்கத்தை ஆக்குவதும் அழிப்பதும் மக்கள் தான் என்றும், விருப்பமில்லாத சர்க்காரை மாற்றியமைக்க மக்களுக்கு உரிமையுண்டென்றும், மக்களுக்காகவே சர்க்கார் இருக்கிறதே யல்லாது சர்க்காருக்காக மக்கள் இல்லை யென்றும் விளக்கியிருந்தார். மத ஆதிக்கத்தைக் கண்டித்து எழுதும் போது ஒரு கிறிஸ்துவருக்கு ஒருவன் பிள்ளையாய் பிறந்து விட்டதினாலே அவன் கிறிஸ்துவனாக இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை யென்றும் வீரமுழக்கம் செய்தார்.

இவ்வளவு பெரும் புரட்சியை கிளப்பி விட்டவரை-விடுபவரை அவ்வரசாங்கம் விட்டு வைக்குமா? அரசாங்கம் தனது காருண்ய பார்வையை அவர்மீது வீசிற்று. உடனே, ரூஸோ தப்பிப் பிழைத்து பிரான்சு நாட்டை விட்டு வெளியேறினார்.

(தொடரும்)

## நல்ல யோசனை தான் ஆனால்?

மக்களுக்கு இன்றியமையாத பொருள்களை விற்பதில் நடுத்தர மக்கள்-தரகர்கள் இருப்பதை யொழித்து விட்டு கூட்டுறவு சங்கங்கள் மூலம் அப்பொருள்கள் மக்களுக்கு கிடைக்குமாறு செய்ய சென்னை சர்க்கார் யோசித்து வருவதாகவும் இதற்கான கூட்டுறவு இலாகா தலைமையதிகாரியின் திட்டத்தையும் அங்கீகரித்திருப்பதாகவும் தெரிகிறது.

யோசனை நல்லது தான்; ஆனால் இந்த யோசனை நிறைவேற கோரிய பலன் கிடைக்க நடுத்தர மக்கள் தரகர் கூட்டம் விட்டு வைக்குமா? இதிலும் அவர்கள் புகுந்து தங்கள் ஆதிக்கத்தை செலுத்திக் கொள்வார்களே என்று அஞ்சுகின்றோம். அங்கிலை ஏற்படாத வாறு தடுக்கப்படுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## "தென் நாடு"

ஆம்பூரிலிருந்து வெளிவந்திருந்த தாழ்த்தப்பட்டோரின் தமிழ் வாரப் பத்திரிகையான "தென் நாட்டுக்கு" ஜூலையில் கிடைக்க வேண்டிய காகித கோட்டா கிடைக்காமையால் கடந்த ஒரு மாதமாக நிறுத்தப்பட்டிருந்தது மீண்டும் இம்மாதம் 31ந் தேதி முதல் வழக்கம்போல் வெளிவருகிறது.

## வீண் பழி

"பாரதி தேவி" 18—3—46ந் தேதி இதழில் துறையூரில் கருஞ் சட்டைப் படையினர் மீது வீண் பழி சுமத்தி வெளிவந்த செய்தி முற்றிலும் பொய்யானதென்றும் அத்தகைய நிகழ்ச்சி எதுவும் நடக்கவில்லையென்றும் ஷையூர் திராவிடர் கழகச் செயலாளர் தோழர் து. மா. பெரியசாமி அறிவிக்கிறார்.

Edited, Published by M. Kandaswamy, Tiruvettipuram (N. A.) and Printed at the Sri Lakshmi Press at Tiruvettipuram by M. Vedapuri Mudaliar.